கவனிக்க.– 26.09.2025 ஆந் திகதிய 2456 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2457 - 2025 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2025.10.03

2457 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 464 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 468 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


463 - B 82725 - 403 (2025/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம்து பிரிவுன்) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளராகிய லிஹிணியா குமாரகே மதூஷ ஸங்கல்ப ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் கீழ் அதிமேதமிகு சனாதிபதி அவர்களினால் 1990.03.26 ஆந் தேதி வழங்கப்பட்ட இலக்கம் கலு/ப்ர/10661 உடைய உரித்துடைமை பத்திரத்தின் உரிமையாளராகிய பாண்திய எனும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட தொடங்கோட ஹேவாகே ஜேமிஸ் அப்புகாமி என்பவருக்கு வழங்கப்பட்டு மத்துகம மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் இலக்கம் எல். டீ. ஓ. 25/193 கீழ் 1991.12.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் விபரம் காணப்படும் காணிக்கு உரித்துடையவர் ஆவதற்கு சட்டரீதியாக உரிமையாளர் யாரும் இல்லை என்பதால் குறித்த உரித்துடையமை பாத்திரத்தை மேல் காணும் சட்ட பிரிவின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அது தொடர்பாக 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னால் எழுத்து மூலம் அறியத்தர வேண்டும்.

**அட்டவணை**

களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் மதுக்கம பிரதேச செயலாளர் பிரிவின் இத்தகொட பாண்திய கிராம அலுவலர் பிரிவின் பாண்திய எனும் ஊரில் அமையப்பெற்றதுமான களுத்துறை நில அளவை அதிகாரியின் பொறுப்பில் உள்ள மற்றும் சர்வே ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட இலக்கம் மு. பி. கே. 2340 உடைய நிலத்துண்டு வரைபடத்தின் இலக்கம் 11 உடைய காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டதும் அளவையில் 0.105 ஹெக்யோர் 0 ஏக்கர் 0 ரூட் 0 பேச்சு அளவு விஸ்தீரனமுடையதுமான கீழ் காணும் எல்லைகளை உடைய அரசாங்க காணி : பிடகும்புருகந்த முகலான

வடக்கு : பி. வ. ப. 1270/2;
கிழக்கு : பி. வ. ப. 2340 ஆல் துண்டு இல. 12;
தெற்கு : வீதி;
மேற்கு : பி. வ. ப. 2340 ஆல் துண்டு இல. 10.

எல். கே. மதூஷ சங்கல்ப,
பிரதேச செயலாளர்,
மதுகம.

2023, நவெம்பர் 30.

10 - 09

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம் பொலன்னறுவை மாவட்டம் ஹிங்குரக்கொடை பிரதேச செயலலாளர் (ப.க.) பிரதிக் காணி ஆணையாளர் ஹிட்டிஹாமு முதியன்சேலாகே சாமினி ராஜிகா குமாரிஹாமி செனவிரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1982.01.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள PL/D/802 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான இல. 37, யாய 5, ஜயந்திபுர முகவரியில் வசிக்கும் இஹலகெதற போதியா என்பவருக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 2/802 ஆம் இலத்தின் கீழ் 1982.01.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு

பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு ஒருவரை நியமிப்பதற்கு இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதானால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அதுபற்றி 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் ஹிங்குறக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பத்து/ கோரளை 70 கிரித்தலை கிராம அலுவலர் பிரிவின் ஜயந்தி கொளணி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ............. பொறுப்பில் இருக்கின்ற, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கபட்டடுள்ள G/17/34,35,42,43,50,58 ஆம் இலகத்தினை உடைய கள பத்திரத்தில் ............ அவர்களினால் தயாரிக்கப்பட்ட ............. F. C. P. PL. 71 ஆம் இலக்க துண்டு பிரித்தல் வரைபடத்தில் ................ அவர்களினால் தயாரிக்கப்பட்ட ............ ஆம் இலக்க ரேகை குறிப்பில் 330 ஆம் இலக்க காணித்துண்டு என்பதாக காட்டப்படுள்ளதும் 02 ஏக்கர், 02 றூட், 37 பேர்ச் விசாலமானதுமான கீழ்க்காணும் எலலைகளை உடையதுமான அரசாங்க காணி - வயற்காணி

வடக்கு : 332 ஆம் இலக்க காணித்துண்டு;
கிழக்கு : 329 ஆம் இலக்க காணித்துண்டு;
தெற்கு : 335 ஆம் இலக்க காணித்துண்டு;
மேற்கு : 331 ஆம் இலக்க காணித்துண்டு.

எச். எம். சீ. ஆர். கே. செனவிரத்தன,
பிரதேச செயலாளர்,
ஹிங்குறக்கொடை.

2025, மார்ச்சு 19.

10 - 39/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (ப. க.) பிரதிக் காணி ஆணையாளர் ஹிமிஹாமு முதியன்சேலாகே சாமினி ராஜிகா குமாரிஹாமி செனவிரத்ன ஆகிய நான் காணி அபிரிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1983.07.15 ஆந் திகதி வழங்கப்பட்ட பொ/பி/7859 ஆந் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான சந்தனபொக்குண எனும் முகவரியில் வசிக்கும் கப்புவடுகே டிகிரி எத்தனா என்பவருக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 3/14/204 ஆம் இலத்தின் கீழ் 1987.07.28 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் உப அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு ஒருவர் இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதானால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அதுபற்றி 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பத்து/ கோரளை 70 F உணகலாவெஹெர கிராம அலுவலர் பிரிவின் உணகலாவெஹெர ஜயந்திபுர கொளணி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பெறுப்பில் இருக்கன்ற F. C. P. PL 63 ஆம் இலக்க துண்டு

பிரித்தல் வரையில் 30 ஆந் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும் ஏக்கர் 03, றூட் 02, 20 பேர்ச் விசாலமானதுமான கீழ்க்காணும் எல்லைகளை உடையதுமான அரசாங்க காணி : மேடு

வடக்கு : 28;
கிழக்கு : 29;
தெற்கு : 39, 41;
மேற்கு : 22.

எச். எம். சீ. ஆர். கே. செனவிரத்தன,
பிரதேச செயலாளர்,
ஹிங்குறக்கொடை.

2025, பெப்புருவரி 22.

10 - 39/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஐ. அய். பீ. சன்தியா பீ. ரத்ணமலல ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995 ஆவி ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வழங்கப்பட்ட பொ/பி/ஹிழங்கு/2001 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மெரகலகே பத்மகுமார தில்ருக் ராஜபக்ச அவர்களுக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 2/24/4/258 ஆந் இலத்தின் கீழ் 1996.10.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் உப அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமைக்காரர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு ஒருவரை நியமிப்பதற்கு இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதனால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அதுபற்றி 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பத்து/ கோரளை 59 முவன்பெலஸ்ஸ கிராம அலுவலர் பிரிவின் முவன்பெலஸ்ஸ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பெறுப்பில் இருக்கின்ற 00 இலக்க துண்டு பிரித்தல் வரையில் 00 ஆம் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும் 00 ஹெக்டயார்/ ஏக்கர். 01 றூட். 00 பேர்ச் விசாலமானதுமான கீழ்க்காணும் எல்லைகளை உடையதுமான அரசாங் காணி : மேடு

வடக்கு : எல். ஆர். திலக்கரத்னவின் காணி;
கிழக்கு : ஒதுக்க காணி;
தெற்கு : எச். ஏ. கருணாவத்தியின் காணி;
மேற்கு : வீதி ஒதுக்கு.

ஆர். ஐ. பீ. சன்தியா பீ. ரத்னமலை,
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொடை.

2023, யூலை 08.

10 - 39/3

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் (4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் உறுப்புரை) அதற்கான அறிவித்தல்**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் கே. ஜீ. டீ. அனோஜா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) துணை உறுப்புரையின் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1996.02.27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாறை/4/பிற/31987 ஆந் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான கொரட்டுவஹேன, பலபாத்த, ஹேனெகம, அக்குரஸ்ஸையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பண்டித்தசேக்கர ஆரச்சிகே பேபிஹாமி இற்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் L. D. O. 4365 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.09.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவர் பின்தொடரும் ஒருவவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**குறித்த அட்டவணை**

மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வெலிகாமம் (வடக்கு) தொகுதியின் ஹேனெகம மேற்கு கிராம அலுவலர் பிரிவின் ஹேனெகம என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான, மாத்தறை சர்வியர் நாயகத்தின் பொறுப்பின் கீழ் காணப்படும் மற்றும் சர்வியர் நாயகத்தினால் தொகுக்கப்பட்டுள்ள அ. க. பி. 556 ஆம் இலக்க துண்டு உடைக்கும் வரைவுக் குறிப்பில் 94 ஆம் இலக்க காணித் துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான, 01 ஏக்கர் 00 றூட் 00 பர்ச்சஸ் அளவு பிரமாண்டமுடையதுமான கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ள கொரட்வெஹேன அரசாங்க காணி,

வடக்கு : பாதுகாக்கப்பட்ட ஓடை;
கிழக்கு : 96, 97 ஆம் இலக்க துண்டுகள்;
தெற்கு : 95 ஆம் இலக்க துண்டு;
மேற்கு : பாதுகாக்கப்பட்ட பெரலிய மூக்கலான.

கே. ஜீ. டீ. அனோஜா,
பிரதேச செயலாளர்,
அக்குரள்ள.

2025, ஒகத்து 29.

10 - 40

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்புகளை பிரிவு 104 இன் கீழ் இரத்து செய்தல்**

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவுக்கேற்ப 1971 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 29 ஆம் திகதி பண்டாரிகுளம், வவுனியா இல் வசிக்கும் தம்பாப்பிள்ளை மூத்ததம்பி என்பவருக்கு R 99894 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு வவுனியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 17.08.1971 ஆந் திகதி LDO/01/325 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் வட மாகாணசபைக்குட்பட்ட வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இந்திரராசா பிரதாபன் ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால், கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2025.10.24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட C 14/63 ஆம் இலக்க வெளிக்கத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட FVP 64 ஆம் இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து - என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட - இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 136 எனக் காட்டப்பட்டுள்ளதும் வவுனியா நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட வவுனியா பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த - பற்று/ கோரளையிலுள்ள வவுனியா கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தாண்டிக்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - ஹெக்டயர்/ 00 ஏக்கர் 03 றூட் 07 பேர்ச்ஸ் விஸ்தீரணமுள்ளதுமான குளகடிடாகாடு

வடக்கு : பாதை
கிழக்கு : காணித் துண்டு 134;
தெற்கு : காணித் துண்டு 137;
மேற்கு : காணித் துண்டு 138.

இ. பிரதாயன்,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

2025, யூலை 01.

10 - 42

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/73674.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L - 10/LS/TRI/MOR/19.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

திருகோ ணமலை மாவட்டத்தின் மொரவெவ பிரதேச செயலக ப் பிரிவின் இலக்கம் 230 C, நொச்சிகுளம் கிராம அலுவலர் பிரிவின் திரியாய கிராமத்தில் அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 173/500 நில வரைபடத்தின் துண்டு A இனால் காண்பிக்கப்படுள்ள 01 றூட் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை வர்த்தக நோக்கத்திற்காக திரு. உக்குராலகே விஜேசிங்க என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

துண்டு A இன் எல்லைகள் -
வடக்கு: வீதி;
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: அரசாங்கக் காணி;
மேற்கு: அரசாங்கக் காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 முதல் 2055.07.22 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை** : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தரப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணியாளர் பிரதேச செயலாளர் திருப்திடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைக்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டடுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழிவதற்கு முன்னர் உப குத்தகைக்கு அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 22.

10 - 37

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77256.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L - 10/LS/TRI/MOR/20.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 231 E, கித்துல் உத்துவ கிராம அலுவலர் பிரிவின் 10 ஆம் மைல் கல் கிராமத்தில் அதிகாரம் பெற்ற நில அளவையாளரரால் தயாரிக்கப்பட்ட 1109 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இல. 01 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 02 ஏக்கர், 80 பர்ச்சஸ் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக திருமதி கொடஹேனகே அனூஷா லக்மினி என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

துண்டு இல. 1 இன் எல்லைகள் -

வடக்கு: எம். லக்ஷித பிரதீப் எம். தர்மதாச மற்றும் என். எச். சுகத் லசந்த ஆகியோரின் காணிகள்;
கிழக்கு: கால்வாய்;
தெற்கு: கால்வாய்;
மேற்கு: அரசாங்கக் காணி மற்றும் பாதை.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 முதல் 2055.07.22 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை** : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தரப்பங்களில் தலைமை

மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் பிரதேச செயலாளர் திருப்திடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழிவதற்கு முன்னர் உப குத்தகைக்கு அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகதத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 22.

10 - 38

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை 2025**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |
| நவெம்பர் | .. | வெள்ளி | 07.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |
| திசெம்பர் | .. | வெள்ளி | 05.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.